ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2382/08 - 2024 අප්‍රේල් මස 30 වැනි අඟහරුවාදා - 2024.04.30

*2382/08 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகிய பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட பகுதியையும் அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் வரையறைகளைக் கொண்டதுமான இப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அத்தகைய பகுதிகளை நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
"செத்சிறிபாய", கட்டம்-II,
பத்தரமுல்லை,
2024, மாச்சு 21.

**அட்டவணை**

ருவன்வெல்ல நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்தினை விரிவுபடுத்தல்

*நிரல் I*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1992.05.29 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 716/ 21 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்திய சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்ட ருவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ளதுமான இலக்கம் 105 வெந்தல கிராம அலுவலர் பிரிவும், 105B தொரனுவ, கிராம அலுவலர் பிரிவும், இலக்கம் 109A கோனாரம்ப கிராம அலுவலர் பிரிவும், இலக்கம் 105A ருவன்வெல்ல கிராம அலுவலர் பிரிவும், இலக்கம் 109 கன்னந்தொட்ட கிராம அலுவலர் பிரிவும், இலக்கம் 104A போபெத்த கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதியும், இலக்கம் 100 இம்புலான கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதியும் மற்றும் 104 மொராவத்தை கிராம அலுவலர் பிரிவின் பகுதிகளுக்கு மேலதிகமாக இலக்கம் 104A போபெத்த கிராம அலுவலர் பிரிவின் எஞ்சிய பகுதியும், இலக்கம் 100 இம்புலான கிராம அலுவலர் பிரிவின் எஞ்சிய பகுதியும், இலக்கம் 104 மொராவத்தை கிராம அலுவலர் பிரிவின் எஞ்சிய பகுதியும், இலக்கம் 103A மொரலிய கிராம அலுவலர் பிரிவும், இலக்கம் 100B மாஹெல்ல கிராம அலுவலர் பிரிவும், இலக்கம் 104ஊ தன்நோறுவை கிராம அலுவலர் பிரிவும், 100A நிவுன்ஹெல்ல கிராம அலுவலர் பிரிவும், இலக்கம் 100B சியம்பலாவெல கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கம் 100ஊ பெதங்கொடை கிராம அலுவலர் பிரிவு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட முழுப்பிரதேசத்தினை உள்ளடங்கியதாகும்.*

*நிரல் II*

**வடக்கு:**

*ருவன்வெல்ல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கு உரித்தாகும் இலக்கம் 100A நிவுன்ஹெல்ல கிராம அலுவலர் பிரிவின் வடக்கு மற்றும் மேற்கு எல்லை இலக்கம் 100 இம்புலான கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லை மற்றும் ஒன்றையொன்று சந்திக்கும் புள்ளியை ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு அந்த இடத்தில் இருந்து அதன் இலக்கம் 100A நிவுன்ஹெல்ல கிராம அலுவலர் பிரிவின் வடக்குத் திசையின் உடாக தென்கிழக்கு மற்றும் வடகிழக்குத் திசையினை நோக்கி இலக்கம் 100B சியம்பலாவல கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை, அந்த இடத்தில் இருந்து அந்தப் பிரிவின் எல்லையின் ஊடாக கிழக்குத் திசையினை நோக்கி இலக்கம் 100C பெதங்கொடை கிராம அலுவலர் பிரிவின் எல்லையினைச் சந்திக்கும் வரை அநத இடத்தில் இருந்து குறித்த கிராம அலுவலர் பிரிவின் எல்லையின் ஊடாக வடகிழக்கு மற்றும் தென்கிழக்குத் திசையினை நோக்கி, இலக்கம் 109 கன்னந்தொட்ட கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை ;*

**கிழக்கு:**

*கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 109 கன்னந்தொட்ட கிராம அலுவலர் பிரிவின் எல்லையின் ஊடாக வடகிழக்கு மற்றும் தென்கிழக்குத் திசையினை நோக்கி இலக்கம் 109A கோனாரம்ப கிராம அலுவலர் பிரிவின் எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை, அந்த இடத்தில் இருந்து அந்தப் பிரிவின் எல்லையின் ஊடாக தென்மேற்குத் திசையினை நோக்கின இலக்கம் 105B தொரனுவ கிராம அலுவலர் பிரிவின் எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை, அந்த இடத்தில் இருந்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையின் ஊடாக தென்மேற்கு மற்றும் தெற்குத் திசையினை நோக்கி, இலக்கம் 105 வெந்தல கிராம அலுவலர் பிரிவின் வடக்கு எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை, அந்த இடத்தில் இருந்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் கிழக்கு எல்லையின் ஊடாக வரையப்படும் கோடானது மேலும் களனி கங்கையின் மத்திய கோட்டினைக் குறுக்கு வெட்டும் புள்ளிவரை.*

**தெற்கு:**

*கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து குறித்த கங்கையின் மத்திய கோட்டின் ஊடாக மேற்கு, வடமேற்கு மற்றும் தென்மேற்கு மற்றும் தென்மேற்குத் திசையினை நோக்கி வரையப்படும் கோடானது மேலும் 103A மொரலிய கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினைக் குறுக்கு வெட்டும் புள்ளிவரை.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*நிரல் II*

**மேற்கு:**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இலக்கம் 103A மொரலிய கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையின் ஊடாக வடக்குத் திசையினை நோக்கி இலக்கம் 104B மாஹெல்ல கிராம அலுவலர் பிரிவின் எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை அந்த இடத்தில் இருந்து அந்தப் பிரிவின் மேற்குத் திசையினூடாக வடமேற்கு, தென்மேற்கு மற்றும் வடகிழக்குத் திசையினை நோக்கி இலக்கம் 104C தன்நோறுவை கிராம அலுவலர் பிரிவின் எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை அந்த இடத்தில் இருந்து அந்தந்தப் பிரிவின் எல்லையின் ஊடாக வடகிழக்குத் திசையினை நோக்கி இலக்கம் 100 இம்புலான கிராம அலுவலர் பிரிவின் எல்லையினைச் சந்திக்கும் புள்ளிவரை அந்த இடத்தில் இருந்து அந்தக் கிராம அலுவலர் பிரிவின் எல்லையின் ஊடாக வடமேற்கு மற்றும் தென்கிழக்குத் திசையினை நோக்கி ஆரம்பப் புள்ளிவரை வரையப்பட்ட கோட்டால் சூழப்பட்ட முழுப் பிரதேசத்தினை உள்ளடக்கும் ஒரு பகுதியாகும்.

EOG 04-240